உ

கடவுள்துணை.

# கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

கதிர்காமத்துயேசல், கதிர்காமக்கும்மி, மங்களம்
இவைகளடங்கியிருக்கின்றன.

இஃது
மதுரைஜில்லா இராமநாதபுரம் சீர்மைசேகரம்
திருப்புல்லாணியிலிருக்கும்
தங்கம் முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள்
குமாரராகிய
இராமசாமிபிள்ளையவர்கள்
இயற்றியதை

இஃது
மைலம்,
சுப்பிரமணியசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு

சென்னை-இட்டா,
பார்த்தசாரதிநாயுடு
அவர்களது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1910.
சென்னை, ஆச்சாரப்பன் தெரு, நெ-84.

உ

சிவமயம்.



கதிரேசன்பேரில்

# ஆனந்தக்களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

## ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென்னாளும் க

பார்புகழ வேதுதி சிறக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள்பெருகக் உ

கானந்த நடனமயி லேறுஞ் சுவாமி
சரஹணபவானந்தன் மீதிலருள்சேரும் ௩

ஆனந்தக்களிப்பிதனைப்பாட-கயிலை
யாளிமலரடியைநா னனுதினமுந்தேட ௪

சதுர்முகன்தேவிநயந்தரவே-யிந்தத்
தாரணியிலுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே ௫

கதிர்காமமானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாருளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம் ௬

திசைமெய்த்தபுகழ்கொண்டு நாளும் நல்ல
செல்வமிகுயாபார தர்மதுரைவாழும் ௭

வைசியகுலநகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன் சன்னதியில்நானே ௮

சொன்னகவிதன்னையாங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராம லென்னையுமேகாத்த ௯

நன்னயமிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமலவடியிணையை நான்றுதிப்பேனே ௰

அருமறைகள்புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையப்பன்கவிதனக் கருள்தரவும்வேணும் ௧௧

குருமுனியைப்பணிக்துகவிகூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல் சபையிலறங்கேற்ற ௧௨

சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்த திருப்புல்லாணியிலே ௧௩

நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கம்
ராமசாமிசொன்ன கவிக்குகந்தவேலன் ௧௪

எச்சரிக்கையென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங்காவடிகள் நின்றுவிளையாட ௧௫

பச்சைமயிலேறியருள் சீலன் நித்தியம்
பக்ஷம்வைத் தென்னகவி யகற்றும்வடிவேலன் ௧௬

தென்கதிர்மானகர் விளங்க-வந்த
தேவாதிதேவர்ஜெயங் கூறியேமுழங்க ௧௭

அன்பானசன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுகவேலருட மாபதிதுலங்க ௧௮

முன்னாலேகோபுர முகப்பில்-எங்கள்
முருகேசன்கோவில் முழுச்செம்பால்வகுப்பும் ௧௯

அன்னமெனுந்தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம் ௨௰

மூதண்டயோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும் ௨௧

நாதமொடுகீதமு முழங்க-வசிய
நகரத்தார்கட்டிவைத்த சத்திரம்விளங்க ௨௨

காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கி வருவார்கள்தேடி ௨௩

மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
மாதவரும்மனிதர்களும் வந்துகிதங்கூட ௨௪

பொன்னலங்காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்ன மேவிளையுந்தேசம் ௨௫

சொர்னமிகுகதிரைவளமெத்த தோழி
சொல்லுகிறேன்நாட்டுவளம் வானுலகுதித்த ௨௬

இந்திரனுடயேவலதி னாலே-வந்த
எழுமேகமுமொன்றுகூடியேமேலே ௨௭

சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
சாகரமதில்த்தாவி தண்ணீரை வாங்கி ௨௮

மாலெனவிசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியேகெற்சித்து மின்னலுமடர்ந்து ௨௯

நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமியெங்குமழை மாரிகள்பொழிந்து ௩0

ஏரிகளும்வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னல் செந்நலும்வளர்ந்து ௩௧

வீரியமிகுந்தமு தத்தின்-நல்ல
வெண்கமுகுசோலைமலை மேலெங்குந்தோண ௩௨

தனியேபழுத்துதிரு மாவும்-அதனில்
தாவியொருகொம்போடே கொக்களுமேவும் ௩௩

இனியமலர்வாசனைகள் தேடும்-வீறென்
றிருபத்துநாலுகால் வண்ணங்கள்கூடும் ௩௪

நாகமதுநாகமதிலேறும்-துய்ய
நாகமேபுனைந்தசில மாதரையும்பாரும் ௩௫

நாகமலர்சோகுமலர்-முல்லை-யிந்த
நாட்டிலேகலைபகடுக் கொருகொம்புமில்லை ௩௬

முல்லையிருவாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து ௩௭

வல்லவினைதீரவெனத் தேடி-மாது
வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும்புகழ்தேவரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯

இதிலேநீரேவாதுசித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி ௪0

கோலமலையழகைப் பாரும்-கதிரை
குமரேசனருளாலே வல்வினைகள்தீரும் ௪௧

மூலகணபதிக்கிளையவர்கள்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨

மாமேவும்புவிபுகழுந்தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு ளளவிடமாட்டேன் ௪௩

பூமேவுங்குழல்வள்ளிநேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன் ௪௪

பச்சைமால்தனக்குமருகோனே-சுவாமி
பழனிமலைமீதிலே மேவுமுருகோனே ௪௫

வச்சிராயுதன்தம்பிமருகா உந்தன்
மலரடியெனக்குநிதந்தரவேணுமுருகா ௪௬

நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭

நவமணியணிந்தவொளிமூவர்-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௪௮

கனகுண்டலமிட்டநீதா-சுவாமி
கார்த்திகேயாலட்ச படைவீரர்தானே ௪௯

தனமேருபாக்கியமருள்வேலா-எங்கும்
சர்வபரிபூரணனந்த சிவபாலா

ஓராருமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧

ஈராறுபன்னிருகையாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவனாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩

ஆண்டிமகனாண்டியிவனாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புரவச்சேரியாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடி குன்றைக்குடியாண்டி ௫௫

மிக்கதிருவேரகத்தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலை விராலிமலை சென்னிமலையாண்டி ருஎ

வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயந்த நாளுமனுகூலா ருஅ

விடவாவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ருகூ

கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க கூ0

மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா கூக

சாலோகசாமீப மென்னும் சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் கூஉ

வேதவேதின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா கூ௩

தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண கூச

அரகராவேலவனே நமோவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேலமாவோம் கூரு

அரகராமுருகா நமோவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம் கூகூ

அரகராகுகனே நமோவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் கூஎ

ஸ்ரீராதேவா நாமாவோம்-சுவாமி
அகிலவுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் கூஅ

தனிலறுமொாயினர் நமோவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் கூகூ

மயிலேறும்நாதா நமோவோம்-வட்ட
வடவாவில் மேவுமால் மருகாநமாவோம் எ0

மயிலேறும்நாதா நமோவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் எக

மயிலேறிநின்றாய் நமோவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் எஉ

திரிபுரபவாவா நமோவோம்-வாலை
சேயனேதிகழொளி பாவாவாநமாவோம் எ௩

திரிபுரபவா நமோவோம்-வள்ளி
பாகனேபவனெழி பவாநமாவோம் எச

சரஹணபவா வா நமாவோம்-கந்த
சுவாமியே சயலொழி பவாநமாவோம் எ௫

தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை எசு

காவாவுன்னீரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னை எஎ

வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ எஅ

தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமென்னுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு எகூ

அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம் மாண்டநாயகனே அ௰

உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும் அக

அன்புபெரும்வரைராஜன் பேரா-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே அஉ

எவன்றேடினாலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக்கவிபாடி னாலும்பாடட்டும் அந

நமக்கென்னவென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ அச

உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதாந்தரியின்பாலாயிப்போது அ௫

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலெ அசு

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் அஎ

தவயோகக்காரர்வெகு வெள்ளம்ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் அஅ

அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ அகூ

அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள்செய் துவந்தசதியோ கூ௰

என்னகுறையிருந்தாலுந்தீர்த்து-உந்தன்
இணையடிக்கியாளாக வென்னையுமேசேர்த்து கூக

ஆளாக்கி யாள லாகாதோ - எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ ௯௩

பாழான மனங்குவியு திலேயோ - யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலேயோ ௯௪

வஞ்சக மில்லாமலே கண்பாரும் - முடிவில்
மறலியுட தூதரெனை வருத்தாமல்க்காரும் ௯௫

அஞ்சுதலை யாருளுந் துரையே - உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்ததுவுஞ் சிறியே ௯௬

ஆறுதலை யண்டரண்டரய்யா - பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா ௯௭

ஆறுபடை வீட்டுக்கதிகாரா - வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா ௯௮

சத்தியுமை பாலகனே சாமி - எந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதற்கேமி ௯௯

சுத்தபரி பூரண வுன்னை - ஓதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௱

பொய்யாத வாழ்வருள வேலா - கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா ௱௧

ஒய்யார மானமுரு கோனே - வந்த
உற்பவ மெனுந்துதியை செய்வேனானே ௱௨

உரமான வசுரரிடராலே - தேவ
ரோடிமுறையிட்டாரோ கைலைமலைமேலே ௱௩

அரனசுரர் மேல்க்கோப மாகி - கைலை
யாளிவிழி தனிலேயொரு பொறிசிதறி யேகி ௱௪

சரஹணப் பொய்கையி லமர்ந்து - அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௱௫

உருவாகி மலர்மீதி லானார் - எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள் மகனார் ௱௬

அப்பவே சென்னியோ ராறும்-மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராறாய் ௱௭

உற்பவ மானாணி ரண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டு ௱௮

அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௱௯

கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுத்தாரே ௧௧௦

தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன் ௧௧௧

தென்கதிரை மானக ரிலங்கும் சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் ௧௧௨

சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக் கிணையான சித்ரமயில் வேலன் ௧௧௩

சத்திவே லாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௧௧௪

கடகமெனு மான திங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே ௧௧௫

கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகே தயங்க ௧௧௬

செங்காவிப் பட்டாலே கோடி-கொடைகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி ௧௧௭

மங்காத சாமரைகள் தோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௧௧௮

சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறை யோத ௧௧௯

பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ் பெறவே ௧௨௦

ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகான வாலாத்தி தீபமே துலங்க ௧௨௧

மாணிக்கப் பேழையி னுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார் ௧௨௨

மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி னுகந்தைப் பாரும் ௧௨௩

சதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்திரு வாபரணஞ் சாத்தி ௧௨௪

கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று ௧௨௫

சரியான பௌராணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி ௧௨௬

வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்து நீராடி ௧௨௭

கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
　　குமரேசன் வள்ளிதனை நாடியே யுகந்து ௧௨௮

புள்ளிமயில் வேலர் விரைவாக-சென்று
　　பூவையெனுங் குறமாது கோவிலுக்கு ளேக ௧௨௯

வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
　　மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௧௩௦

சித்ரமணி மலரணையில்த் தாவி-நல்ல
　　செங்கமல காத்தா லணைத்திவர்கள் மேவி ௧௩௧

கொத்துமுத்து நத்துவளை திருத்தி-யிவர்கள்
　　குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள் பொருத்தி ௧௩௨

இங்கிர்த மணாளகுண நீதா-யெனக்கு
　　யினியசுக போகமத லீலாவிநோதா ௧௩௩

எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
　　யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௧௩௪

அத்தைபெற்ற முத்தேயென் கோனே-யென்றன்
　　ஆணங்கை யுபசரித்து தேனேயம்மானே ௧௩௫

முத்திரையிட்டிலங்குகொங்கை யாலே-வள்ளி
　　மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௧௩௬

கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
　　கட்டழகி வள்ளிதனை பார்த்துமத போஜன் ௧௩௭

சலதாத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
　　தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௧௩௮

எந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
　　இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே ௧௩௯

வந்துவெகு நேரமா குதடி-யெந்தன்
　　மாதுதெய் வானையெனத் தேடுவாளநாடி ௧௪௦

போய்வாறேன் விடைதாடி யென்ன-வள்ளி
　　பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௧௪௧

வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான்
　　போய்வார மென்றசொன்ன வகைதானென்ன பேச்சு ௧௪௨

அங்கேநீர்போய் செலுத்துமதி காரம் யெந்த
　　னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோ வீரம் ௧௪௩

இங்கேரண்டு நாளிருந்துபோனால் சுவாமி
　　என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனால் ௧௪௪

என்மனையி லிருக்கையிலே யவளேன் உம்மை
　　யேன்தேட வேண்டியது சுவாமிநீர் சொல்லும் ௧௪௫

உண்மையெனக் கின்னதென்று தானே சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே ௧௪௬

இங்கேவந்து நானிருப்பதாலே யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானையொருக்காலே ௧௪௭

மங்கையருந் தேடுவா ளின்று யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று ௧௪௮

இவர்கூற வள்ளியின்னாளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை ௧௪௯

அவசர முமக்கென்ன யெங்கே-சுவாமி
ஆனாலும் நீர்போக சம்மதியே நிங்கே ௧௫0

கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக் கஞ்சிநான் பயப்படவு மாட்டேன் ௧௫௧

தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் ௧௫௨

பார்த்தே தடிவள்ளி மானே-சற்றும்
பாராம லிம்மொழிகளேன்சொல்லுவானே ௧௫௩

ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி ௧௫௪

சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி ௧௫௫
வந்தபடி யாலவ ளுனக்கு-முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு ௧௫௬
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம் ௧௫௭
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே ௧௫௮
போகவிடை தாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமுட்ட ௧௫௯
மானக மேடையி லிருக்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளென விளங்கும் ௧௬0
தெய்வானை சொந்தமாய் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ ௧௬௧
கைமாயஞ் செய்தோமோ நாங்கள்-ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்தீரோவுங்கள் ௧௬௨
சாதியா ரேசுவா ரோகாண்-நீருந்
தலைமறைய யென்மனைக்கி வருவானே யேன்காண் ௧௬௩

ஆதியுலே யென்னை யு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து ௧௬௪

கூட்டிவந்த நாரதரைக் கேளும்-வனத்தில்
குளத்தருகி லேயிருந்த கரடிபுலிவாழும் ௧௬௫

காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௧௬௬

சிவதலங்கள் செயசபைமுன் னலே-வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினலே ௧௬௭

அவள்மாத் திரஞ்சொந்தக் கிளேயோ-சுவாமி
ஆனலும் நான்கிழக்கு முகமிருக்கவில்லையோ ௧௬௮

வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து ௧௬௯

கள்ளிபோல் வீணிலிரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே ௧௭௰

செண்டுசமு சாரமா காது-யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௧௭௧

வண்டார்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி ௧௭௨

நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினைவறிந்து வள்ளியவன் சிறியெதிர்நின்று ௧௭௩
வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௧௭௪
என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர் கொண்டே ௧௭௫
அன்புற நெருக்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறே னென்றார் ௧௭௬
சொல்லுகிற சமாச்சார மென்ன-உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துமினி யென்ன ௧௭௭
நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிக் கேழ்ப்போம் ௧௭௮
தேவசபை யிலேசொல்லிப்பாரு-அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு ௧௭௯
ஒவியமே உன்னுறுதி கேட்க-யெழுதும்
உடன்படிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௧௮௦
உடன்படிக்கை முறியெழுதித் தாறேன்-வள்ளி
புனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௧௮௧

கடக்கவென்னைத் தள்ளாதே மானே-யென்று
கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானே ௧௮௨

தனியே வனத்திலிரு பெருங் - கூடும்
சையோக வேளையிலே பார்த்தென்னை நீரும் ௧௮௩

இனியசெந் தேனேகற் கண்டோ - உந்த
னிதமென்று சொன்னதுவு மில்லையோவுண்டே ௧௮௪

முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ - யிப்போ
மூத்தகுடி யாளுமக்கு சர்க்கரைபோலாச்சோ ௧௮௫

என்னைநீர் வசைசெல்வ தேனோ - சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ ௧௮௬

தந்தையுங்கள் கோட்டையெடுத் தாரே - யெங்கள்
சாதியார் வந்துநிதந் தின்றுகெடுத்தாரோ ௧௮௭

சந்தனற் குறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்த சாதியிலு மில்லாமலுண்டோ ௧௮௮

மங்களகல்யாணமதி நல்லாள்-அந்த
மணவறையி லென்தகப்ப னிட்டநகையல்லால் ௧௮௯

உங்களிடம் வந்தநாட் கொண்டோ-யெனக்கு
ருத்திராட்ச வடத்துக்கொரு நவமணியுமுண்டோ ௧௯௰

மாதிவை யுரைக்கமுத் தையன்-வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்லுவார்மெய்யன் ௧௯௧

எதடிநீ பேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்ன கண்டாய் ௧௯௨

குபேரன்மகள்போலே பேசாதே-நொப்பன்
கொடுத்துவிட்டவரிசைகளைவெளியேசொல்லாதே ௧௯௩

சபையார்க ளென்னவறி யாரோ-யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ ௧௯௪

உடுத்திவந்த துணிக்கிவே றுண்டோ-களிம்பு
ஊறிய பித்தளை யோலைக்கி வேறுண்டோ ௧௯௫

தொடுத்திருந்த கருமணியோடே யென்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடை ௧௯௬

வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணையிட் டறியாததலையும் ௧௯௭

புண்ணுக்கு போயிழுக்கு மேலுங்காட்டில்
புரண்டிசெடி முள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும் ௧௯௮

எப்போதுங் காய்கிழங்கை தின்ன-நீயும்
இருந்தகெதி தெரியாதோ வரும்போதென் பின்னும் ௧௯௯

அப்பவே நானழைத்து வந்து - நல்ல
வாபரண மானதையு மழகாயணிந்து ௨௱

செம்பவழ மாளிகை யமைத்து - உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து ௨௱௧

நம்பிநான் செய்ததை மறந்து - வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து ௨௱௨

மாதேநீ பதருதே வாடி - யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி ௨௱௩

கோதையே யிதுவென்ன மூர்க்கம் - உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம் ௨௱௪

சாராயங் கள்ளுகள் குடித்து - குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள்பிடித்து ௨௱௫

பூராயம் தெரியாமற் கத்தி - கண்ட
பூனைகளை யோவாரா முதலென்றுகுத்தி ௨௱௬

தின்பதுவு முண்டதிகமாக - குறவர்
சேரியிலேநீ பழகி வந்தவைபோக ௨௱௭

செம்பவள வாயாளே யென்று - சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு ௨௱௮

விண்ணுனம் பேசுவது சிரோ - சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ ௨௱௯

கண்ணப்ப னெச்சிதிங் கலையோ - சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவுமிலையோ ௨௧௦

புத்தியுமக் கில்லாதே போமோ - கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ ௨௧௧
யெத்திசையும் புகழ்பெற்ற நாதா - வென்று
யிவள்சொல்லும் வகைகண்டு கூறுவார்தோதா ௨௧௨
அடங்தேரு வார்குடிமி குந்தால் - குறவர்
அவர்தனக் கேசிலவுக் கில்லாதிருந்தால் ௨௧௩
கடன்வாங்கு வார்சம்மதித்து - தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து ௨௧௪
குடுத்துவிட்ட பணத்துக் கீடாக - வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன்வெகுவாக ௨௧௫
அடுத்தவளை யனுதினமுங் கூடி - யிவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப் பெற்றபின்தேடி ௨௧௬
பணங்கொடுத்து திருப்புகிற போது - பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்மாது ௨௧௭

குணமாக முன்னீடு வைத்த - பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலேமெத்த ௨௧௮

இதுபுதுமை யிவ்வுலகி லுண்டோ - வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ ௨௧௯

கதிகொண்ட மயில்வா கனத்தார் - இந்தக்
கதைசொல்லவே வள்ளியவ ளெதிருரைத்தாள் ௨௨0

குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ் - சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந் தெரியும் ௨௨௧

மறந்தீரோ நீரறிந்த திலையோ - யொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலையோ ௨௨௨

சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி - உங்கள்
சிவன்தலையில் வைத்தனுமே சுமந்ததுக்குச் சாட்சி ௨௨௩

நந்திகேசு பர்சொல்லக் கேட்டேன் - சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்ல மாட்டேன் ௨௨௪

ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார் - உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫

கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ - ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்ததுவும் பொய்யோ ௨௨௬

கண்ணுயிரங்கொண்ட நேத்தி - யொம்மான்
பெண்ணுசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர் கொடுக்காத தெதினால் - யொண்ணன்
பெருவயறு கொண்டுவழிக் கரையிலிருந்ததினால் ௨௨௮

அண்ணனுமே மத்தளங் கொட்ட - சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள் கூடியே நகைக்க - வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிர்மிக்க ௨௩0

தேவடியாள்போ லுமது வன்னை - கூடுந்
தேவசபை யிலேனின்று ஆடலையோமுன்னை ௨௩௧

பாவலருக் கருள்புரியுஞ் சீலா - யிதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்கவடிவேலா ௨௩௨

பத்மாசூர னுக்கு மிகப்பயந்து - உங்கள்
பரமசிவ னோடலையோ காட்டுவழி நுழைந்து ௨௩௩

கைப்பொருளு மில்லாமல் தேகி - யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪

கும்பமுனிக் கருள்புரிந் தோரே - யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பானயென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி உ௩௬

குதிகொண்ட வனக்குறவற்சாதி-வகையை
கூறித்துசொல்லுகிறேன் கேளுமவர்சேதி உ௩௭

சதிர்பெருகுந் திருவிழாக்கடையில்-ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில் உ௩௮

கூசாமல்கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல்பணிதிகளைக் கழற்றியேயெடுத்து உ௩௯

பேசாமலோடுவது கண்டு-குறத்தி
பெரிதனக்காரர்களுமேபிடித்துக்கொண்டு உ௪0

வம்பிலே தலைமயிரைக் கட்டி-குரத்தி
மார்பிலேபோடுவார் சொல்லென்றுகிட்டி உ௪௧

செம்பாணிகொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையையுரிந்தம்மண மாகவேநிறுத்தி உ௪௨

அடிதண்டமாகவே யடிப்பார்-குறவர்
அப்பவுமெடுக்கவில்லை யென்றுமேதுடிப்பார் உ௪௩

தடியடிக்கிசையாத சாதி-குரவர்
சங்கைகெட்டுநிர்ப்பார்கள் தெரியுமவர்சேதி உ௪௪

என்றிவருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வானப்போது உ௪௫

தொண்டர்தொழுகின்ற மயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும் உ௪௬

அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள்கூடிவரு மாய்ப்பாடிவாழும் உ௪௭

இடையருடவளவிலென் னுளும் உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் உ௪௮

அன்றுடனசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து உ௪௯

ஒன்றாக மாதரொருபக்கங்-கூடி
உரலோடேகட்டினதைச் சொன்னாலும்வெட்கம் உ௫0

கட்டுண்டதும்ரோஷ மிலையோ-பெண்கள்
கட்டியசேலைகளைக் களவாண்டதிலையோ உ௫௧

வெட்டியசமர்க்களத்தி லேரும்-கிருஷ்ணன்
விஜையனுடகுதிரைகளை மேய்க்கலையோபாரும் உ௫௨

ஊத்துகிறகஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலிமாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் உ௫௩

கூத்ததிகமுண்டின்னம்ரெம்ப-சொல்லக்
கூசுதேயென்மனமு மென்றிவளியம்ப உருச

கேட்டவடிவேலர்கைநீட்டி-வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைகாட்டில் உருரு

நீட்டயிருகால்களை நிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாகவளைகூட்டியேபொருத்தி உருசு

நத்தியகயற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாமல்மூங்கிலிலை யாலமேய்ந்தகுச்சு உருஎ

சுத்திவைத்தசுவரெல்லா மோட்டை-யசந்து
தூங்கவும்விடாதங்கே முணுமுணுத்தமூட்டை உருஅ

ஆடேறிமேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர்தனக்கதிக மிருக்கவிடமில்லை உருகூ

மூடாதவாசல்களைக்கண்டு-பார்த்து
மூடினாலுசரவொரு முகட்டொழுக்குமுண்டு உசுo

தேடாதபொருள்சிலவு காணும்வைத்த
தீபமுந்தெரியாது தோணாமல்தோணும் உசுக

கூடாதுகுறவீட்டை நம்ப-சற்றே
குந்தவைக்கமுடியாது நசுநசுப்புரெம்ப உசுஉ

குறம்பாடிக்கஞ்சுகளை வாங்கும்-உங்கள்
குறவருடபக்கியெல்லாங்கூரையிலேதூங்கும் உசுந

வரம்பேதுமில்லையென் றாளும்-யென்று
வடிவேலர்சொல்லவே வள்ளிமின்றாளும் உசுச

தமக்கென்றுசிறுகுடிசைகட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி உசுரு

உமக்கொருதலத்தினிலும்நாடி-சுவாமி
ஓண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி உசுசு

கையிலரைக்காசுமே யில்லாமல்-வீடு
கட்டியேகுடியிருக்க வகையுமறியாமல் உசுஎ

வெய்யலிலும்வேனிலிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்கனிந்து உசுஅ

இருப்பதுவைக்கண்டுமனம் வாடி-யுமக்கு
யிவ்வுலகிலுள்ளவர்க ளெல்லோருங்கூடி உசுகூ

சிறக்கவேகோவில்க ளமைத்துஉமக்கு
செம்பொன்மணியாபரணம் விருதுகள்சமைத்து உஎo

வடிவேலவாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி உஎக

அடியவர்கள்புண்ணியமீ தையாநீரும்
அழகானகோவில்களிலிருக்கிறதுமெய்யா ௨௭௨

தேருமதகரிபரியு மிரவல்-எமக்கு
ஜெயமேளபேரிகையுங் கோவில்களுமிறவல் ௨௭௩

ஏறுமயில்வாகனமு மிரவல்-உமக்கு
யிட்டநவரத்னமணி யாபரணமிரவல் ௨௭௪

இத்தனையுமுமக்கிரவல்தானே-குறவர்
இருப்பிடத்தைப்பழிக்கிறீ ரெண்ணுமல்வினே ௨௭௫

வெற்றிவேலதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொருஆஸ்திகளின் மேலென்னசொந்தம் ௨௭௬

மச்சமுனிமறைபொருள்களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச் சொன்னாரேகேளும் ௨௭௭

மச்சாளேமறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொருமாமனே அளவளந்ததாதன் ௨௭௮

ஆத்தாளோபாலுருப்பரச்சி-அவளுக்
கருமையுள்ளதமையனையும் வளத்தவளுமிடைச்சி ௨௭௯

தத்தாவோமீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்தனானவனும் நல்லகுலமரவன் ௨௮௦

அரனென்றுமைமீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லேசாதியிலே சொல்வார்கள்மெய்யா ௨௮௧

வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் ௨௮௨

இதற்குமுன்னேநானறிந்தாலும்-உமக்கு
இசைவானேநீர்குட்டிக் கரணம்போட்டாலும் ௨௮௩

அதற்கென்னசெய்யலா மையா-நாங்க
ளானுலுங்குறச்சாதி யென்பதும்பொய்யா ௨௮௪

பண்டாரம்நானென்று கத்தி-யெந்தன்
பரணைதிரே வந்தீரே யதுவென்னபுத்தி ௨௮௫

கொண்டுகுலம்பேசுவது போச்சோ-சுவாமி
கொய்ததினைமாவுக்கெனை கெஞ்சினதும்போச்சோ ௨௮௬

பேருதெரியாமலுருமாறி-வந்து
பிசகுசெய்தமாதரியி னாலேமதமீறி ௨௮௭

பாரமதயானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாவிட்டால் ௨௮௮

வழிகியிந்தாடிகுறவஞ்சி-யென்று
வனவேடன்போல்வந்து யென்னைதிரேகெஞ்சி ௨௮௯

களையாகுதெனவந்து முட்டி-நீரும்
காரியங்கொண்டபின் பேசுகிறீர்செட்டி உகூ0

வலியநான்வந்தேனே தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்னசெட்டு உகூக

சலியாமல்நீறுருதி சொன்ன-மொழிகள்
தவறுவரோகலிகால மானாலுமென்ன உகூஉ

பொன்னடிதுலங்கியென்மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமு மகலாமல்சாமி உகூங

யென்னருகிலிருமென்று கேட்டால்-சுவாமி
யென்குலத்தைநீர்பழிக்க யுமக்குவிளையாட்டா உகூச

வையகத்துக்கேர்க்காது யென்னை-நீரும்
வஞ்சகம தாயிழந்து பேசுவதுதன்னை உகூரு

தெய்வானையோசொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள் உகூசா

எப்படியோநானறிய வில்லை-லோக
மெங்கும்நீர்போகாத விடமொன்றுமில்லை உகூஎ

இப்படியுமருந்திட்டதாரு-உமக்கு
யேலாதோசொல்லவந்த மங்கையர்கள்பேரு உகூஅ

வருந்திவிருந்தளித்தவளைச்சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாறேன் சற்றேயிங்கேநில்லு உகூகூ

மருந்திடுமயக்கமில்லாவிட்டால்-எனக்கு
பதில்சொல்லமாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ஙா

முருக்குவளைதாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்கசுவாமியேநீ கூட்டிவாயோடி ஙாக

கருதுமருந்திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்குகைபார்க்கவேணும் ஙாஉ

மின்னாரேயென்றிவளுஞ் சொல்ல-யெங்கள்
வேலரிதுபுதுமையெனக் கேட்டவருமெள்ள ஙாங

யென்னடிவீண்யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டிலேயிருந் துண்ணதைநீகண்டாய் உாச

என்னுடையசொல்வுருத் மீறி-நீயும்
எதிர்பேசினதினாலேயுன்னைநான்சீறி ஙாரு

சொன்னவகையல்லாது கண்ணே-சும்மா
தோகையேநானுமுன்னை பேசுவனேபெண்ணே ஙாசு

மயங்காதே நீவள்ளிமாதே-உந்தன்
மனமறியநான்சொன்ன தல்லதிப்போதே ஙாஎ

ஜெயமாகநான்போயி வருவேன்-வள்ளி
தினமுனைப்பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௫.ா௮

உந்தனைவிட்டகல்வேனோ-மானேயென்று
யுபசாரஞ்செய்தங் கிருக்கையிலேதானே ௫.ா௯

கந்தனையுங்கோவிலுக்குள் தேடி-அங்கே
காணமல்தெய்வானை யம்மன்மனம்வாடி ௫.௧௦

மங்கையரேசந்த்ரப்பிரகாசன்-அந்த
மாணிக்கெங்கைக்குப்போனமுருகேசன் ௫.௧௧

யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம்வரவேணு மென்றிடவேயோடி ௫.௧௨

தாதியர்களெல்லோருஞ்சென்று யெங்கள்
சண்முகவேலாயுதனைத்தேடினரென்று ௫.௧௩

ஆதிசிவமாணிக்கெங்கை-தீர்த்த
மாடவந்தவேலவரைக் கண்டீர்களோயிங்கே ௫.௧௪

பாதிபிறைநுதலழகியாளே-அவன்தன்
பர்த்தாவைக்காணேமென்று தேடவதினலே ௫.௧௫

கதித்தபுகழ்கொண்டமினிவோரே-யெங்கள்
கந்தனைகண்டதுண்டோ சொல்லுவீர்நீரே ௫.௧௬

காணிக்கைகொண்டு வந்தாரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனரே ௫.௧௭

காணிக்கெங்கை நீராட-யிங்கு
வந்தவரைக்காணிர்களோ யினியெங்குந்தேட ௫.௧௮

பாங்கியர்கள்நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக்காரர்தெரு வீதிவழிநாட ௫.௧௯

ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ்சிந்தையி லறுந்தன்புகொண்டு ௫.௨௦

நினைவில்மறக்காததெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்சேனை ௫.௨௧

எனையழைக்க வேணுமென்றுதேடி-வாரூர்
ஏத்தியே நான்போயிவரவும்விடைதாடி ௫.௨௨

தாயென்று சொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து ௫.௨௩

தேடிவநதபேர்களைநா னடிப்பேன்-அந்த
தெய்வானைவந்தாலு மேசண்டைபிடிப்பேன் ௫.௨௪

என்னுடையகணவனையுந்தேட-அவளுக்
கென்னவதிகாரம்விடை கேழ்க்குறீரோட ௫.௨௫

மன்னவாயிது வென்னமென்றே-சொன்ன
வள்ளியுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬

யெனக்குரியமானே நீ கோபம்-இப்போ
யென்பேரில்வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭

உனக்குநான்பிசகுசெய்வேனோ-பெண்ணே
யோசனைகள்செய்யாதே நான்மறப்பேனோ ௩௨௮

போய்வாறேன்வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடிதெய் வானையிடமேக ௩௨௯

வாய்திறந்துசொல்லுமன மகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேட்கவே வள்ளியுமுகந்து ௩௩௦

மறைபுகழுகின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா ௩௩௧

இறைபவருக்குகந்தமகனாரே-யென்று
இவள்சொல்லவேலர்வழி கூடிநடந்தாரே ௩௩௨

சித்திரவடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்ததாதியர்கள் கண்டடிபணிந்தார் ௩௩௩

வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪

மங்கையரேயெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குப்போனேன் ௩௩௫

செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினதுமென்னவகை சொல்லாயோபெண்ணே ௩௩௬

தெய்வானையென்றார் துணிந்து-அந்த
தேவிசெவ்வேள்பாத மலரடிபணிந்து ௩௩௭

வைபோகமானவடிவேலே-உடைய
மணவாளாஉமக்குநித மிதுதானேவேலே ௩௩௮

இளையான்மேலிருக்கிறபாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯

அழையாதவிருந்தோ நீர்காணும்-வள்ளி
யவன்மனைக்கிநிதம்வலியப் போகவோவேணும் ௩௪௦

முழுக்கவேயும்மாலே யேச்சோ-சாதி
முறைதவறிக் குறவருடசம்பந்தமாச்சே ௩௪௧

இழுக்கானசாதியிலேகி-மாலை
யிட்டாலுமேன்மையது தருவாரோயோகி ௩௪௨

அடிக்கடிநீயவள்மனைக்குப்போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால் ௩௪௩

குடிதனிலுயர்ந்தவளுமில்லை-வள்ளி
குறவர்குலமானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪

நிசமென்றுநீரெண்ணுவீரோ-உமக்கு
நேர்ந்ததுவும்வள்ளியுடமோகமதவீறோ ௩௪௫

அசையாமலானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபோகிறீர் நானுமக்குப்பாரி ௩௪௬

யாகினானெடுத்ததென்ன சோட்டை-புவியில்
அரியாரோநீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭

தேகியெனவாண்டிபோலானீர்-வள்ளி
தேவியவள்தினைமாவை தின்கவேபோனீர் ௩௪௮

திரிபுவனையருள்பெற்றபாலா-உமது
சித்தமதுவெப்படி கதிரைவடிவேலா ௩௪௯

அரிமருகரேயென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன்சொல்லுவார் தெய்வானைமெய்க்க ௩௫௰

மானேநானுன்வுருதிபெற்றேன்-பின்பு
வள்ளிதனைமாலையிட்டுகூட்டிவந்துவைத்தேன் ௩௫௧

தேனேயென்மேற்பிழைகளில்லை-உனக்கு
தெரியாதோவிணுவில் பேசுவதுதொல்லை ௩௫௨

கோவிலுக்குநீபோடியென்று-யெங்கள்
குமரேசன்சிம்மா சனத்திலேயென்று ௩௫௩

சேவலொருமையினி லிருக்க-யெங்கள்
சித்திவடிவேலவரு மேகொலுவிருக்க ௩௫௪

சூடதீவாராதனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள்கோடானு கோடியன்றைக்கி ௩௫௫

அடியவர்பணிந்துதுதிபாட-கதிரை
ஆறுமுகன்மீதினில்கவிமாலைசூட ௩௫௬

சிம்மாதனத்திலிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயெனவந்தவர்கள் சூழவேபெருக்க ௩௫௭

அம்மாபரஞ்சோதிபாலன்-நல்ல
அன்புடன்னருளுவா ராறுமுகவேலன் ௩௫௮

துன்பவினையணுகாமல் தானே-நீங்கள்
சுகமாகவாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௩௫௯

தென்கதிரைவேலராருளாக-வந்த
தேவர்களுமனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௩௬௦

சித்தர்களும்வந்துநிதம்பணிய-யிந்த
செந்தமிழ்தனக்குதவிசெய்சுப்பிரமணிய ௩௬௧

கர்த்தனருளாலேகுறைவில்லை-ஆருங்
கதிகாமமென்றாலும் வறுமைகளுமில்லை ௩௬௨

தேவர்களுமுனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலுமாயனாரனு முமையாளும்வாழி ௩௬௩

நாவலரும்பாவலரும்வாழி-வள்ளி
நாயகன்மேறகவியி தென்னாளும்வாழி ௩௬௪

புள்ளிமயில்வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்குமநகரத்தார் புகழ்பெறவேவாழி ௩௬௫

வள்ளிதெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங்கதிரேச னென்னாளும்வாழி ௩௬௬

## கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

---

உ

சிவமயம்.



# கதிர்காமத்துயேசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத் துதிபண்ணியே ௧

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னை மறவேனே-கந்த
வேளெனுமெங்கள் முருகோனே ௨

கோனெனுமிந்திரனுங் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடன்கதை வாழ்த்த ௩

யின்பமுடனேவரு மன்புள்ளதோழிய ர
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர் காமமதைப் பாரும் ௪

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடி துலங்கும் தோகையர்-இந்த
மாவளமாநகரில்த் தானையா ௫

மாவளமாயிந்த மாநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே சு

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தரபவனிவாற தாரையா எ

அந்தரபவனிவரும் கந்தன் பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வாரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி அ

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை சு

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளேயெங்கள்பர மேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி ௧௦

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரோ
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கொயிலாகசொல்லுமறுசீறு ௧௧

ஓயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி ௧௨

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா ௧௩

ஏனெரித்தாரென்றாயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான் ௧௪

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜயன்வில்லை
வாங்கிசிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் ௧௫

தாங்கினதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார் ௧௬

ஆணைமுகம்பெரும் பானையவறிலங்க
அந்தாயிருக்கிருரே பாறையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா கஎ

தந்தமது துலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளித்
தனியகுமரன்தமை யோ ன்கண்ணே கஅ

இனியகுமாரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதி தானோ கசு

வேஷமெடுத்துகண் டேசிவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண்டாடினல்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினள் உ0

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிகுந்தசுந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
மங்கையைகூட்டிக் கொஞ்சினரே உக

மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி உஉ

சொந்தமாய்வேலனுக்கு யிந்தமள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோமணமாலை-திருப்
பூட்டவில்லையோபுவி மேலே உங

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளிலே
பூமனுஞ்செய்தாரடிவேலன்-ஆழி
வாமனன்தங்கையருள் பாலன் உச

வாமணனுமஞ்செய்து நேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குட்டை மின்னயிந்த
தந்திமேலேறிவாற தென்ன உரு

தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டிக்கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே உசு

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே உஎ

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத் தூண்டி-வாரூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி உஅ

தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானவதைப் பாரையா உகூ

சித்திரமானவன் சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப்பாரடி ௩ய

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றூரவ ராரு - அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த ஊரு ௩க

...ரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றுறா ராடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி ௩உ

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா ௩௩

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௩ச

என்னேரமுங்கொழும்பில் சொன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தை நாடியேயிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே ௩ரு

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமகாப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி ௩சா

வருஷங்கள்தோறுமிங்கே வருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகினலைப் போதுகாண் யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண் ௩எ

ஆருகாணென்றுய்புக ழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள் ௩அ

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரோ தோணும்-நல்ல
செல்வமிகுந்தவரோ காணும் ௩கூ

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டையாருக்கே சய

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபோகரும் சொல்வதேதையா சக

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவருமல்ச்செய்துவந்த தோதினல்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினர் கஉ

அவர்களைப்போலனேகர் யெவளவோதர்மஞ்செய்தார்
யேனையோர்கானுமந்த நாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபே ரேனில்லை சஙு

போர்புகழ்சரிதைகிரிகை நேருங்கு னருளும்
பெற்றதினல்நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத்தாரே சச

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னல்
சிறக்கவலங்கரித்த தாரையா சரு

ஆரென்றுய்பெண்ணேயெங்கும் பேருனதென்மதுரை
ஆலயத்தைதப்புதுப்பித்த தாரடி-வடி
வேலனருள்நகரத் தாரடி சசு

வேலனைப்பெற்றசத்தி வானுசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனுர்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா சஎ

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியில்ப்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியும்தன்மைபோல் கொடையாரடி சஅ

கொடைகள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயற்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர் சகூ

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலை நாட்டினர்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினர் ருO

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஒகோ
மன்னவருமக்கெந்த தேசம் ருக

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சிமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி ருஉ

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவர வேணும் ருஙு

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் போகனடி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகனடி ௫௬

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு ௫௭

சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேனி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோனும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகலமாட்டார்-மாயன்
செந்திருவால்கதிரை நாட்டார் ௬0

நாட்டாரடியவர்மேல் நட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்செல் லாரோ-நாமும்
கேட்டவரங்கள் தருவாரோ ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருகனுர்க்கே யெண்ணி
வாசமாய்நம்பிநடந் தோர்க்கே ௬௨

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி-யினி
கூறும்ஜெயமங்களம் வாழி ௬௩

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி. ௬௪

கதிர்காமத்து ஏசல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமேல். க

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாலே
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் காரணியே. உ

சுந்தரரீரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர்களைப்போற்றி. ௩

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா. ௪

கந்தன்கதிர்காம வேலனேபுவி
கார்க்குமறைமுத லோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ௫

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கஙெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி. ௬

கந்தனுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்னப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி. ௭

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி. ௮

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக்கொண்டாடவே
யேதுபிழைகளிருந்தாலும் சுவாமி
ஏழைக்கிரங்கியெனையாளும். ௯

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான். ௰

சத்திக்குகந்தமான் தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி ௧௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்செந்நெல்
அள்ளியவலெங்கும் தூத்தினர். ௧௨

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளந்தோணும் ௧௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மாம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும். ௧௪

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும். ௧௫

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே. ௧௬

வீதியலங்கார மெத்தவடி யிதில்
  மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கொலுவில்
  சூழுந்திருமதில் தாவரமும் ௧௭

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
  கொடியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
  யம்மைதெய்வானைக்கி மாடமும். ௧௮

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
  லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
  ஸ்தானிகராவதும் சிங்களவர். ௧௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
  நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசக் குறித்தவர்கள்விட்ட
  மானியங்கள்ரொம்பம் பெற்றவர்கள். ௨0

புத்தமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
  பூசையில்நித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
  நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும். ௨௧

தெய்வானைக்கொத்த மலர்கள்கொய்வார்
  தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
  மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
  பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
  காலாயுதக்கொடி வீரனடி. ௨௩

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டிஅந்த
  தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
  சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்னவ ரேகானும்அந்த
  தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனால் தடந்தோணும். ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையாய்ச்சொல்லவும் வேணுமையா. ௨௬

சொல்கிறேன்கேளடி மின்னாளேதேவர்
சொன்னசப்தத்தால் முன்னாலே
வெல்லவேமாதரும் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮

ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியேயிதர்க்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நட்பாலே சொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே ௨௯

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௦

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான். ௩௧

சீதையினாலே மனமுகந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் போர்பொருந்திக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி. ௩௨

பரப்பிலேபத்து யோசனையாம்கவிப்
படைமலைகொண்ட தற்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும்அணை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும். ௩௩

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பொருமையால் கொஞ்சம்போராக்கி
அன்னுள்விபூஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணுளேலெங்கை
நகரம்நாள்சென்று பின்னுலே
கோட்டையழிந்து கடலாசசுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு. ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாட்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்இதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும் ௩௮

நத்தியேநாகர் சிலகாலம்மேல்
நாட்டையாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினர்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினர் ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராஜன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி. ௪௰

தலைமன்னரென்று பேட்டைக்கட்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர்மகள்கூட. ௪௧

செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள்வெகு பேர்களடி. ௪௨

வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்யிந்து
மதசமையத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைந்தரசரு மீறினர். ௪௩

சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க. ௪௪

பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யசண்டை யிட்டுக்கொண்டார். ௪௫

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுயெந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு. ௪௬

உன்னிதமான மலையுமுண்டுயிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம் ௪௭

கேட்டவாக்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம்சிவ
நாதனுகந்தகோ ணேஸ்பரமாம். ௪௮

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமரபுரம்புக
ழிலங்கும்சந்திர சேகரபுரம். ௪௯

கண்டவர்மொய்த்த மாவிட்டபுரம்ராஜ
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம். ௫0

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமுன்னே
ராமனுதனாலமைந்ததடி
பூமிக்குறித்தான மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த. ருக

கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராசபுர பட்டணமாம். ருஉ

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு ருங

பன்னகரமதும் பறைநாடாம்யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை ருச

கண்டவிடமெல்லா மூராச்சுகோயில்
கட்டியக்கட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள். ருரு

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்இவன்
தலைமுறைவளா ராஜர்களும். ருசு

தொண்ணூத்தாறுமுடி மன்னரடிஅதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில். ருஎ

கண்டியரசனும் பின்னாலேஅவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க்காரனடி அவன்
வம்மிஷம்நாய்க்க ராஜனடி. ருஅ

அதற்குமுந்திய ராஜர்கொடிக்கட்டி
ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு

மதிப்பதர்க்கிடந் தோணுமலைக்காடு
 மண்டியிருப்பதும் தானுமே. ௫௯

இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
 இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
தங்கையுடனர சாளையிலேசீமை
 தன்னிலிருந்திந்த வேளையிலே. ௬௰

சிங்காரக்கப்பல் பறங்கியேயிந்த
 தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிகரம் தலைவகுத்துப்புத்தர்
 தாவுங்கழனித் திசையடுத்து. ௬௧

கோட்டையுக்கட்டிக் கொடிபூட்டியதைக்
 கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி
வெட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
 விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. ௬௨

தொட்டதிருக்கோண மாமலையும்அந்த
 துறைமுகங்களை யாண்டதையும்
ஓட்டாமல்தள்ளி விணாவாகிவந்து
 உலாந்தாக்காற ருசாராக. ௬௩

ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
 ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
 மேதினியையெல்லாம் சீர்திருத்த. ௬௪

கும்பமுனியார்வந்து ஓட்டிக்கொண்டார்யிந்த
 கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிலுற்றூர்கோடு
 வங்காளச்சேரி கட்டலுற்றூர். ௬௫

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெருங்
 கள்ளர்களைச்சுட்டு யறுத்திட்டார்
வண்டிக்கிறேட்டுக ளுண்டுபண்ணியிதில்
 மாகாணங்களாய்த் துண்டுபண்ணி. ௬௬

துறைமுகங்களை நோக்கிகாப்பித்
 தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்ரேகு
 நிறைந்ததீர்வைப் பணங்களும். ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
  விளம்பும்ஆபிசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
  இங்கிலீஷ்காரர் தன்னரசே ௬௮

பூட்டிறயிலையும் நடத்தினர்பெங்கும்
  புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலலைக்கிபூட
  தடுத்தணைகட்டி யேநெருக்கி. ௬௯

தண்டவாளச்சூட்சம் வைத்தாரேமலைத்
  தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
  வாறதனேகமாய் நித்தமடி. ௭௦

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம்யிந்தியா
  சக்கரவர்த்திபட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
  ராணிகட்டளைப் படிநடத்தும். ௭௧

இங்கிலீஷ்காரரா லேயல்லோநம்ம
  இந்தியாவும்லங்கைத் தீவுமல்லோ
சங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
  தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியிற்கள்ளர் பயம்போச்சு-வெகு
  புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளாலொரு
  தாழ்வொன் றுயில்லையே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தன்மை யுடன்வாழும்கவி
  சாற்றிய மன்னவரேநெளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
  ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
  அறிந்தமட்டுமின் னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணாரேவர்ன்ன
  கோல்விழிக்கயல்க் கண்ணாரே ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
  ஆண்டகிரேதா யுகத்திலே

கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
  கோனைவெருட்டியே கொளுத்தியே. எசு

பாரவினையாளுக் கெஞ்சாதவெகு
  படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
  வீரமயேந்திர புரமாண்ட. எஎ

வாசமுள்ளவீர நாளையிலேஅவன்
  வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவிடு மிதில்தாண்டிகந்தன்
  படைப்பெருக்க மிதில்த்தாண்டி. எஅ

குன்றெனும்வீரனைத் தூக்கினுர்தேவர்
  கோனுக்கரசையுண் டாக்கினுர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
  அண்டர்களும் விசுவாசமடி. எகூ

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
  காமமென்றேபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
  வள்ளிமணுள னிவன்தாண்டி. அ0

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
  வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவ ரைவாழ்த்தமுறை
  விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. அக

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
  மேளம்தவண்ட முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
  மூலஸ்தானத்தை பாருங்கடி. அஉ

மூலஸ்தானந் தெரியாமேசபை
  முன்னதமண்டபம் தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
  திரைமறைப்பிங்கே யேதுக்கையா. அங

திரைமறைப்பு வளமையடிகந்தன்
  சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குகந்தன்
  முன்மணிவாசலுந் தோணுது. அச

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன் தனை
நானறியவகை சொல்லுமையா. ௮௫

நானுமறிந்தது மில்லையடிசொன்னால்
நம்புவையோயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோனுட்டல்கந்தன்
சேருவைகாண முடியாது. ௮௬

சேருவைகாண முடியாட்டால்யிதைச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றால்வர்ன்னப் பேழையொன்றுஅதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. ௮௮

பவனிவந்திடும் பேழையதுயென்ன
பாவினையாகவே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேழைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். ௮௯

அருள்நிறைந்தது சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறிவறிந்து துலகாட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯௰

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா. ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோனுமடி. ௯௨

6

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
   சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
   அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. ௬௩

அறிந்ததின்னுடைய னுத்தாவால்பன்னி
   ரண்டுக்கொருதா மாத்தினவர்
உரியசத்தமவுனங்கொண்டுசமா
   துகள்தடைந்தவர் கோடியுண்டு. ௬௪

கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
   கொலுவின்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைவேந்தன்
   சேருவைச்சேகர மெப்படிகாண். ௬௫

சேகரமான மலைகளுண்டுசுத்தி
   திரண்டிருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
   கிசைந்துபோனவ ரில்லையடி. ௬௬

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
   புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனாலவரெப் படிபோனார்போக
   லாகாதென்றிவ்விதம் சொல்லுவீர்காண். ௬௭

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
   கையனுத்தரவி னால்தாண்டி
பேசினாலந்தக் கதிர்மலைக்கிவழி
   யிசையதோனு மிருள்விலக்கி. ௬௮

யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
   யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
   சேரும்படிவழி விட்டிடுமோ. ௬௯

விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
   வேலவனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
   தாண்டியேயேறி நடந்திடலாம். ௭௦

கடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள் கூட்டமதிகமுண்டோ. ௱௧

அவர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாதே மானிடர்க்குசபை
காணவுந்தோணாது தோழிப்பெண்ணே ௱௨

தோணாதென்றது மெய்யவரும்பிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணாதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௱௩

கண்டுதொழுவ தெல்லாமலையும்யெங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லைஅங்கே
துடிவயிரவன் காவலடி. ௱௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குவகை ௱௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்குமூர்த்தி
ராஜரால்கட்டிய கோவிலடி. ௱௬

கட்டியகோவில் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முடிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௱௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி. ௱௮

தீனதுகூறிய மாபதியில்லல்ல
சித்திரவேலன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டின தார்காணும். ௱௯

கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுசந்ததர்மம் மடம்சமைத்தார். ௱௰

உசந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௱௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு. ௱௧௨

வாரதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௱௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
முககோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரென்னும்கந்த
சாமித்திருவிழா கூட்டமடி ௱௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன, ௱௧௫

வளமையேழுத்தின் மேல்மிருந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலேதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி. ௱௧௬

கந்தனுக்கேர்த்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௧௧௭

தேறுமேலேறும் வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீராடப்பானதைப் பாருங்கடி. ௧௧௮

நீராடப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்றாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா. ௧௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீயுறாப்பாவென்பதும் மெய்தாண்டி. ௧௨௦

மெய்யானஆறு முகவனெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௧௨௧

முத்தியுண்டுவினைத் தானுமடிதவ
முத்தர்முகிழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேரதருள்வார் முருகேசன். ௧௨௨

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்சொன்ன
வாசமிருந்த தமிழதனைப்பெரிய
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௧௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகராம் திருப்புல்லாணி
நன்னயமாகிய வூர்தாண்டித்தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௧௨௪

பேளாயும்ஊளையு மேபுகழ்ந்துசொன்ன
  பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீருந்
  தானிங்கேவந்த வயணமென்ன. க௨௫

வந்துகொழும்பதனில் சிறந்துவெகு
  வாலமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
  கைதொழுதேத்தவும் வந்தேனடி. க௨௬

கைதொழுதேற்றிய மெய்வாசன்நம்ம
  கந்தன்க்திரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
  செந்தமிழால்துதி சொல்லுமையா. க௨௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
  துன்பமகற்று மிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
  தேவிசிவகாமி யின்தவத்தால் க௨௮

அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
  யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
  தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். க௨௯

தீராதநோய்தனை தீர்த்தவண்டிசுவாமி
  சித்தம்வைத்துநம்மைக் கார்த்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
  நாதன்செந்தூரு முருகனிவன். க௩௰

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
  சித்திரசேவல் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
  முழங்கக்கும்மி யடியுங்கடி க௩௧

சிம்மாசனத்தி லிருந்தவனாவளம்
  சேர்கதிர்காம முகந்தவனா
யிம்மானிலத்தவர் போற்றியேஅவ
  ரெண்ணிவந்தபடி நேத்தியே. க௩௨

செலுத்தும்வேடிக்கை பாருங்கடி-கந்தன்
  தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடி கந்த
  சாமிக்கிசிங்காரம் நித்தமடி. கங௩

முப்பத்துமுக்கோடி தேவருக்கும்-நல்ல
  மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்குந்தரு
  காவலர்க்குந்திசை காவலர்க்கும். கங௪

சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நம்ம
  செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
  மங்களம்வாழி மிகவாழி. கங௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
  சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்புகழ்
  சாமியிடும்பனும் வாழியதாம். கங௬

கதிர்காமக்கும்மி

முற்றுப்பெற்றது.

—*—